10 DEC 2010
சேப்பாக்கம், சென்னை-5

சுருக்கம்

பெயர் மாற்றம் – வேலூர் மாநகராட்சி – லாங்கு பஜார் – ஆபிஸர்ஸ் லேன் – ஆகிய சாலைகளை முறையே "திருமுருக கிருபானந்த வாரியார் சாலை'' மற்றும் ''அண்ணா சாலை'' என பெயர் மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.6) துறை

அரசாணை (நிலை) எண். 305

நாள்: 09.12.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
கார்த்திகை–23

படிக்கப்பட்டது:

1. அரசாணை (ப) எண்.573 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14–12–2001
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.8043/ 2010/எம்–1 நாள் 20–3–2010.
3. வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க.எண்.சி3/ 22336/2010 நாள் 07–6–2010

-------

ஆணை:

வேலூர் மாநகராட்சியில் மண்டித்தெரு, லாங்கு பஜார், கமிசரி பஜார் ஆகிய மூன்று தெருக்களின் பெயரை மாற்றம் செய்து "திருமுருக கிருபானந்த வாரியார் சாலை'' என பெயர் மாற்றம் செய்யும்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். இதைப் போன்று, டவுன் ஹால் ரோடு, பாரக்ஸ் மைதானம் சாலை, ஆபிஸர்ஸ் லேன் ஆகிய மூன்று சாலைகளையும் இணைத்து ''அண்ணா சாலை'' என பெயர் மாற்றம் செய்யும்படி மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் வேலூர் மாவட்ட ஆட்சியர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2) நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலித்து முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவித்துள்ள வழிமுறைகளுக்கு விலக்கு அளித்து இதனை சிறப்பு நேர்வாக கருதி, வேலூர் மாநகராட்சியில் லாங்கு பஜார் சாலையை "திருமுருக கிருபானந்தவாரியார் சாலை" எனவும், ஆபிஸர்ஸ் லேன் சாலையை "அண்ணாசாலை" எனவும் பெயர் மாற்றம் செய்து அரசு ஆணை வெளியிடுகிறது.

3) மேற்கண்ட பெயர் மாற்றம் குறித்த அரசாணையினை மாவட்ட அரசிதழில் வெளியிட தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேலூர் மாவட்ட ஆட்சியர் இவ்வரசாணையின் மூலம் பணிக்கப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அசோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-600 005
மாவட்ட ஆட்சியர், வேலூர் மாவட்டம், வேலூர்.
ஆணையர், வேலூர் மாநகராட்சி, வேலூர்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, சென்னை- 600 108.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், (கே.ஆர்), சென்னை-600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை -600 009
முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர்.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை-600 009.
இ.கோ/உ.நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.